மாண்புமிகு திரு. கி. மனோகரன்: அவருக்காக நான் பதில் சொல்லக் கூடாது என்று விதியில்லை. இம்மாதிரி யாருக்கும், யாரும் பதில் சொல்லலாம். இது நிரந்தர ஏற்பாடா, தற்காலிக ஏற்பாடா என்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டதற்குப் பதில் தாற்காலிக ஏற்பாடு.

வளையங்குளம் வட்டாரத்திற்குப் பாசன வசதி

*வினா 484.—**திரு. மெ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் தொகுதி, வளையங்குளம் வட்டாரத்தைச் சார்ந்த 30 கிராமங்களுக்குப் பாசன வசதிக்கென நிலையூர் வாய்க்கால் சிந்தாமணி பேராணை இவைகளிலிருந்து ஒருகால் கொண்டுவர இந்த அரசாங்கம் உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) இதற்கான முதல்நிலை ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இத் திட்டம் இந்த ஆண்டு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள இயலும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

தொழில்நுட்ப உதவியாளர் சம்பளம்.

*வினா 485. **திரு. ஈஸ்வரமூர்த்தி பி. என்கிற சொரணம்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு முடித்து சிவில் இன்ஜினியரிங் சப்ஜெக்ட் படித்தவர்கள் தொழிநுட்ப உதவியாளர்கள் என்ற பெயரில், பணி ஆய்வாளர்களை விட உயர்ந்த பொறுப்பில் உள்ளவர்களுக்குப் பணி ஆய்வாளர் சம்பளம் வழங்கப்படும் தவறான போக்கு அரசின் கவனத்திற்கு வந்ததா?

1978 மார்ச் 10]

(ஆ) ஆம் எனில், அதனை அரசு உடன் மாற்றி நீதி வழங்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஆ) குறைந்தபட்சம் இன்ஜினியரிங் டிப்ளமா பெற்றிருப்பவர் மட்டுமே தொழில் நுட்ப உதவியாளர் வேலைக்கு நியமிக்கப்படுகிறார்கள். எஸ்.எஸ்.எல்.சி.-க்குப்பின் ஒன்று அல்லது இரண்டு இன்ஜினியரிங் பாடங்களில் தனியாக சர்டிபிகேட் வாங்கியவர்கள் பணி ஆய்வாளர்களாக நியமிக்கப்படுவதற்கே தகுதி பெற்றவர்கள் ஆவார்கள். தொழில் நுட்ப உதவியாளர்களுக்கும் பணி ஆய்வாளர்களுக்கும் வெவ்வேறு சம்பள விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

தென் சென்னை மின் வழங்கு நிறுவன ஊழியர்கள்.

*வினா 486.—**திரு. செ. சதாசிவம்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தென் சென்னை மின் வழங்கும் நிறுவனத்தின் ஊழியர்கள் சுமார் 4 வருடங்களாகியும் மின் வாரியப் பணியாளர்களாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஆ) இப்பணியாளர்களைப் பணியில் முறைப்படுத்துதல் போன்ற கோரிக்கைகள் தமிழ்நாடு மின் வாரியத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது. வாரியம், சம்பந்தப்பட்ட ஊழியர்களின் தொழிற் சங்கங்களோடு பேச்சு வார்த்தைகளை நடத்தி வருகிறது. அவை முடிந்தவுடன், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, இது போலவே தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்தில் உள்ளதை அரசாங்கம் மேற்கொண்டது. அந்த மின்வாரியப் பகுதியிலே